DIET LIBRARY
No:
Virudhunagar Dt.
PALAYAMPATTI

2019

No. of Printed Pages : 4

401445

**1701**

Register Number

**Second Year**

# இந்தியக் கல்வி முறை

# INDIAN EDUCATION SYSTEM

(Tamil Version)

கால அளவு : 3 மணி நேரம் | உச்ச மதிப்பெண்கள் : 100

**அறிவுரைகள்** : (1) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அவற்றை அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாக தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

## பகுதி - அ

I. **அனைத்து** வினாக்களுக்கும் ஒவ்வொன்றிற்கும் **100** சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும். **15x2=30**

1. புத்தரின் போதனைகள் யாவை ?

2. விவாதம், சிந்தனை - வேறுபடுத்துக.

3. தொழில் நோக்கம் மனிதனை எவ்வாறு மாற்றுகிறது ?

4. பெண்களுக்கு கல்வியில் சமவாய்ப்பு வழங்கிட அரசால் மேற்கொள்ளப்படும் திட்டங்கள் யாவை ?

5. சமூகநிலைப் பெயர்வு என்றால் என்ன ?

[ Turn over

6. எழுத்தறிவு பெற்றவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் போது சமூகத்தில் என்ன மாற்றங்களைக் காணலாம் ?

7. பள்ளி மேம்பாட்டுத் திட்டம் ஏன் உருவாக்கப்பட்டது ?

8. வாழும் முறைகளைத் தீர்மானிக்கும் காரணிகள் யாவை ?

9. மாணவர்களிடையே சமதர்மத்தை உருவாக்க நீவிர் மேற்கொள்ளும் செயற்பாடுகள் யாவை ?

10. கற்றலை எளிமையாக்குவதில் ஒன்றிய பயிற்சி மையங்கள் (BRC) எவ்வாறு உதவுகின்றன ?

11. சிசுவகங்களின் பணிகள் யாவை ?

12. குழந்தை தொழிலாளர் முறையை ஒழிப்பதற்கு அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை ?

13. அரசின் கல்வித் திட்டங்களை திறம்பட நடைமுறைப்படுத்துவதில் ஆசிரியர்களின் பங்கு யாது ?

14. தொடக்கப் பள்ளி மாணவர்களிடம் நன்னெறியை வளர்க்க நீவிர் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை ?

15. பள்ளி மேலாண்மையில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் பங்கை ஆராய்க.

## பகுதி - ஆ

II. **எவையேனும் பத்து** வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் **200** சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும். **10x4=40**

16. கல்வி பற்றிய ரூசோவின் கூற்றை வரையறுக்கவும்.

17. ஆதாரக்கல்வி மூலம் மாணவர்கள் அடையும் வாழ்க்கைப் பயனை விளக்குக.

18. கல்வியின் பண்பாட்டு நோக்கங்கள் யாவை ?

19. தேசிய கலைத்திட்ட வடிவமைப்பின் (NCF 2005) வழிகாட்டும் கொள்கைகள் யாவை ?

20. கல்வி முன்னேற்றத்தில் சமுதாயப் பங்கேற்பின் அவசியத்தை விளக்குக.

21. கல்வியும், பண்பாடும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை விளக்குக.

22. அரசியல் அமைப்பு கொள்கைகளின் கூறுகளை விளக்குக.

23. 'அனைவருக்கும் தொடக்கக்கல்வி' என்னும் இலக்கை எட்ட நீவிர் கூறும் ஆலோசனைகளைப் பட்டியலிடுக.

24. முறைசாராக் கல்வியின் முக்கியத்துவத்தை விளக்குக.

25. பள்ளிகளில் தேச ஒற்றுமையை வளர்க்க நீவிர் கூறும் ஆலோசனைகளை வரிசைப்படுத்துக.

26. மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் ஏழு கிளைகளை மனவரைபடம் வரைந்து விளக்குக.

27. பணி உறுதிப்பாடுள்ள ஆசிரியரின் குணநலன்களாக நீவிர் கருதுவன யாவை ?

## பகுதி - இ

**III.** பின்வரும் வினாக்களுக்கு 500 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும். **3x10=30**

**28.** (அ) சங்க காலத்தில் கல்வியின் சிறப்புகளை பின்வரும் தலைப்புகளில் ஆராய்க.

(i) சங்க இலக்கியங்கள்

(ii) ஆசிரியர் - மாணவர் உறவு

(iii) பெண்கல்வி

(iv) பாடப்பொருள்

(v) பயிற்றுமுறை

**அல்லது**

(ஆ) கருத்தியல் கொள்கை, உண்மையியல் கொள்கையிலிருந்து எவ்வாறு வேறுபடுகிறது ?

**29.** (அ) அமைதிக்கல்வியின் அவசியத்தைப் பற்றி ஒரு கட்டுரை வரைக.

**அல்லது**

(ஆ) தேசிய கல்விக் கொள்கை 1986 -ன் தொடக்கக் கல்வி இலக்குகள் யாவை ?

**30.** (அ) கீழ்க்கண்ட தலைப்புகளை விளக்குக.

(i) தேசியக்கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் (NCERT) பணிகள்

(ii) தேசிய ஆசிரியர் கல்விக் குழுமம் (NCTE)

(iii) மாநிலக்கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககத்தின் (SCERT) பணிகள்

**அல்லது**

(ஆ) தொடக்கப்பள்ளியில் தலைமையாசிரியராக நீவிர் நியமிக்கப்பட்டால் உன்னுடைய பங்கினையும், பணிகளையும் பற்றி ஒரு கட்டுரை வரைக.

- o 0 o -